# சாதி மத பேதத்தைச் சாடுங்கள்



எதிர்ப்புக்கு அஞ்சாதீர்.
ஏளனத்தைக் கேட்டு ஏமாறாதீர்.
மதத்தின் முன் மண்டியிடாதீர்.
கடவுளைக் கண்டு கருத்தழியாதீர்.
அறிவே துணை
மானமே மனிதனை மனிதனாக்குகிறது
என்பதை உணருங்கள்.
உலுத்தர் பேச்சை
உதறித் தள்ளுங்கள்.
சமத்துவம் நாடுங்கள்.
சகோதரத்துவம் கோருங்கள்.
சாதி மத பேதத்தைச் சாடுங்கள்.
தோல்வி கண்டு சலிப்புறாதீர்.
மாற்றார் மமதை கண்டு மனம் மருளாதீர்.
சிந்தித்து முடிவுக்கு வாருங்கள்.
அதன் வழி செயலாற்றுங்கள் செம்மல்களே!

**- பேரறிஞர் அண்ணா**

பெண்கள் ஜூனியர் ஆசிய கோப்பை ஹாக்கி:

# சாம்பியன் பட்டம் வென்றது இந்தியா!

மஸ்கட், டிச.17

9வது பெண்கள் ஜூனியர் ஆசிய கோப்பை ஹாக்கி போட்டி (21 வயதுக் குட்பட்டோர்) ஓமன் தலைநகர் மஸ்கட்டில் நடைபெற்றது.

லீக் சுற்று முடிவில் சீனா, இந்தியா, ஜப்பான், தென் கொரியா ஆகிய அணிகள் அரையிறுதிக்கு முன்னேறின.

நேற்று முன்தின நடந்த முதல் அரையிறுதியில் நடப்பு சாம்பியன் இந்திய அணி, ஜப்பானை வீழ்த்தி இறுதிக்கு முன்னேறியது. மற்றொரு அரையிறுதியில் தென் கொரியாவை சீனா வீழ்த்தியது.

இந்நிலையில், நேற்று முன்நதினம் டைபெற்ற இறுதிப்போட்டியில் இந்தியா, சீனா அணிகள் மோதின. முதல் பாதியில் சீனா 1-0 என முன்னிலை பெற்றது. போட்டியின் முடிவில் இரு அணிகளும் 1-1 என சமனிலை பெற்றது.

இதையடுத்து, ஷூட் அவுட் முறை கொண்டு வரப்பட்டது. இதில் இந்திய அணி 4-2 என்ற கணக்கில் சீனாவை வென்று சாம்பியன் பட்டம் வென்று அசத்தியது.




தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் முன்னாள் தலைவரும், முன்னாள் மத்திய அமைச்சரும், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினருமான ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் மறைவையொட்டி ஈரோடு தெற்கு மாவட்ட தி.மு.க. மற்றும் அனைத்துக் கட்சிகளின் சார்பில் அமைதி ஊர்வலம் கழக நெசவாளர் அணிச் செயலாளர் எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம் தலைமையில் பெருந்தலைவர் காமராஜ் சிலை தொடங்கி பன்னீர் செல்வம் பூங்காவில் நிறைவடைந்தது. பூங்காவில் அலங்கரிக்கப்பட்ட ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் அவர்களின் திருவுருவப்படத்திற்கு அனைத்து கட்சி தலைவர்கள், தொண்டர்கள் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செய்து புகழஞ்சலி செலுத்தினார்கள்.

நடைப்பயிற்சி – குளியல் – உணவுக் கட்டுப்பாடு என

# கோயில் யானைகளுக்கு அனைத்துப் பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன!

## சட்டப்பேரவையில் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை, டிச.17-

கோயில்களில் உள்ள யானைகளுக்கு நடைப்பயிற்சி, குளியல், உணவுக் கட்டுப்பாடு, தேவையான மருந்து, மாத்திரைகள் என அனைத்து பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகிறது என சட்டப்பேரவையில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேசும்போது குறிப்பிட்டார்.

சட்டப்பேரவையில் பா.ஜ.க. உறுப்பினர் வானதி சீனிவாசன் பேசும்போது, இந்த அரசு பதவியேற்றதிலிருந்து கோயில் யானைகளுக்கு புத்துணர்வு முகாம்கள் நடத்தப்படாத காரணத்தினால், திருச்செந்தூரில் யானைப்பாகன் உயிரிழந்திருக்கிறார். நெல்லையப்பர் கோயிலில் கோயில் யானை உடல்நலமின்மையால் பாதிக்கப்பட்டிருப்பதால், அங்குள்ள பக்தர்கள் மிகுந்த மன வேதனையில் இருக்கிறார்கள். அதனால் கோயில் யானைகளுக்கான புத்துணர்வு முகாம் நடத்தப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார்.

அப்போது குறுக்கிட்டுப் பேசிய அமைச்சர் பி.கே.



சேகர்பாபு, 26 திருக்கோயில்களில் இருக்கின்ற 28 யானைகளுக்கு, இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகுதான் குளியல் தொட்டிகளும், 15 நாட்களுக்கு ஒருமுறை கால்நடை மருத்துவர்களைக் கொண்டு பரிசோதனை செய்வதும், மூன்று மாதங்களுக்கு ஒரு முறை வனத் துறையினர் வருகை தந்து ஆய்வு செய்து, அந்தத் திருக்கோயி ல்களில் உள்ள யானைகளினுடைய நிலையைக் கண்டறிந்து, அதற்குண்டான சான்றிதழ்களும் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது.

அதோடு மட்டுமல்லாமல், திருக்கோயில் யானைகள்மீது கொண்டிருக்கின்ற கரிசனம் இந்த ஆட்சிக்கு ஓர் எடுத்துக்காட்டு என்னவென்றால், மதுரையிலே இருக்கிற பார்வதி என்கிற யானைக்கு கண்ணில் பாதிப்பு ஏற்பட்டவுடன் அதற்கு முறையான மருத்துவ சிகிச்சை வேண்டுமென்று, டென்மார்க்கிலிருந்து மருத்துவர்களை அழைத்துவந்து, பரிசோதனை செய்து, அந்த யானையின் உயிரைக் காப்பாற்றி, பார்வையைத் தந்த ஆட்சி இந்த திராவிட மாடல் ஆட்சி என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமாத்திரமல்ல, அவர்கள் புத்துணர்வு முகாம்கள் நடத்தப்பட வேண்டுமென்றார்கள். புத்துணர்வு முகாம்களுக்குத் தேவைப்படுகின்ற அனைத்து பயிற்சிகளையும், அதாவது, நடைப்பயிற்சி, குளியல், உணவுக் கட்டுப்பாடு, தேவைப்படுகின்ற மருந்து, மாத்திரைகள் முதற்கொண்டு அனைத்தும் வழங்கப்பட்டு வருகிறது. ஏதாவது சில கோயில்களில் அப்படியிருந்தால், உறுப்பினர் அவர்கள் என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால், அந்த யானையை புத்துணர்வு முகாமுக்கு அழைத்துச் செல்வதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது.

திருச்செந்தூரில் ஏற்பட்ட சம்பவம் அசாதாரணமான சம்பவம். அதற்குப் பிறகு அந்த யானையை முதலமைச்சர் அவர்களுடைய ஆணையோடு சென்று சந்தித்து, நானே அந்த யானைக்கு கரும்பு போன்ற அனைத்து உணவுகளையும் கொடுத்து விட்டு வந்திருக்கிறேன். உங்கள் கட்சியினுடைய சட்டமன்றத் தலைவர் நயினார் நாகேந்திரன் அவர்கள் நெல்லையப்பர் திருக்கோயிலினுடைய யானையின் நிலையைப் பற்றி நேற்றைக்குச் சொன்னார். இன்றைக்கு அங்கு மருத்துவர்களை அனுப்பி பரிசோதித்திருக்கிறோம். தேவைப்பட்டால் எந்த உயர் சிகிச்சை வேண்டுமென்றாலும், புத்துணர்வு முகாமுக்கு செல்ல வேண்டிய அவசியம் இருந்தாலும் அழைத்து செல்லப்படும் என்பதை உறுப்பினர் அவர்களுக்கு பேரவையின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். அனைத்து யானைகளும் சுகமாக, நலமாக இருக்கின்றது என்று குறிப்பிட்டார்.

கலசப்பாக்கம் தொகுதியில் – கடந்த ஆட்சியில்

# போக்குவரத்து பணிமனை தொடங்கி கைவிட்டு விட்டீர்கள்!

## பேரவையில் அ.தி.மு.க. உறுப்பினர் கேள்விக்கு – அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் விளக்க பதில்!

சென்னை, டிச. 17 -

சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின் போது அ.தி.மு.க. உறுப்பினர் கலசப்பாக்கம் தொகுதியில் பேருந்து பணிமனை தொடங்கப்பட்டது குறித்து கேள்வி எழுப்பிய போது, போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் பதிலளிக்கையில், கடந்த ஆட்சியில், போக்குவரத்து பணிமனையைத் தொடங்கினீர்கள். ஆனால் அவற்றினை கைவிட்டுவிட்டு சென்றீர்கள் என்று குறிப்பிட்டார்.

இது குறித்து பேரவையில் நடைபெற்ற விவாதம் வருமாறு:

**அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதியிலுள்ள எலத்தூர்-, மோட்டூர், நட்சத்திர கோயில் பகுதியில் அமைக்கப்பட்டிருக்கின்ற போக்குவரத்து பணிமனையானது, நான் கலசப்பாக்கம் தொகுதியில் சட்டமன்ற உறுப்பினராக இருந்த போது, ஒரு கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்து கட்டப்பட்ட பணிமனையாகும். அதற்குப் பிறகு, ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தினுடைய பொது நிதியிலிருந்து ரூபாய் 50



இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுச்சுவர், கழிப்பிட வசதி மற்றும் தொழிலாளர்கள் தங்குவதற்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன. கடந்த மூன்று ஆண்டுகளாக, இந்த அரசு வந்த பிறகு, அதைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கலாம். அந்தப் பணிமனை வீணாகக் கூடாது என்பதற்காக முதல்வர் அவர்களும், அமைச்சர் அவர்களும் கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதியில் ஏற்கெனவே அமைக்கப்பட்டிருக்கின்ற போக்குவரத்து பணிமனையை உடனடியாகத் திறந்து வைத்து, அந்தப் பகுதி மக்களுடைய நீண்டகால கனவை நிறைவேற்றித் தருமாறு கேட்டு அமர்கிறேன்.

**அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர்:** மூலக் கேள்வியே இதுகுறித்துதான். சட்டமன்ற உறுப்பினர் பெ.சு.தி. சரவணன் அவர்கள் கேள்வி எழுப்பினார். அதற்குப் பதிலளிக்கும் போதே நான் உங்களைக் குறித்தும் பேசியிருக்கலாம். கேள்வி- - பதில் நேரத்தில் குற்றச்சாட்டு வைக்க வேண்டாம் என்று, நான் அதைத் தவிர்த்தேன். நீங்கள் அதைத் துவக்கினீர்கள் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. ஆனால், அதை முழுமைப்படுத்தவில்லை. தரைத்தளம் அமைக்கப்படவில்லை; மின்விசிறி வசதி செய்துதரப்படவில்லை; வருகின்ற பணியாளர்கள் தங்குவதற்கான அறைகள் இல்லை என்பன போன்ற பிரச்சினைகளெல்லாம் இருக்கின்றன. அதை, நீங்கள் நினைத்திருந்தால் அப்போதே செய்திருக்கலாம். ஆனால், உங்களுக்குள் இருந்த சில பிரச்சினைகள் காரணமாக, யார் செய்வது, யார் திறப்பது என்கின்ற பிரச்சினை கள் காரணமாக, கைவிட்டுவிட்டு போய்விட்டீர்கள். இதை நான் சொல்ல வேண்டாம் என்று நினைத்தேன். (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் சொல்ல வைத்திருக்கின்றீர்கள். இவ்வளவும் செய்தீர்கள்—ஒரு திரைப்பட வசனம் இருக்கிறது, ‘பேரு வச்சயே ராசா சோறு வைக்கலேயே’ என்று. அந்த மீதி பணிகளையும் நீங்கள் முடித்திருந்தால் அதை இந்நேரம் திறந்திருக்கலாம். (மேசையைத் தட்டும் ஒலி). எனவே, நிதிநிலைமை சீரான பிறகு, அவற்றை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஏற்கெனவே தெரிவித்திருக்கிறேன். அந்தப் பதிலையே உங்களுக்கும் தெரிவிக்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

நெய்வேலி நிலக்கரிச் சுரங்க

# ஒப்பந்தத் தொழிலாளர் ஊதியம் குறித்து அரசு நடவடிக்கை என்ன?

## மக்களவையில் தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி!

புதுடெல்லி, டிச.17-

“நெய்வேலி நிலக்கரிச் சுரங்க ஒப்பந்த தொழிலாளர்களின் ஊதியம் குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?” என்று நாடாளுமன்ற மக்களவையில் தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி எழுப்பினார்.

நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தில் ஒப்பந்த தொழிலாளர்களின் பிரச்சினைகள் குறித்து மக்களவையில் தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி எழுப்பினார்.

அதன் விபரம் வருமாறு :-

கேள்வி:

நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தில் பணியாற்றும் ஒப்பந்த தொழிலாளர்களின் பிரச்சினைகள் குறித்து ஒன்றிய அரசு கவனத்தில் எடுத்



துக் கொண்டிருந்தால் அதன் விவரம்.

நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தில் தினக் கூலி தொழிலாளர்களுக்கு மாதந்தோறும் 20 முதல் 24 நாள்கள் குறைந்தபட்ச வேலைநாள்களை வழங்க ஒன்றிய எடுத்துள்ள நடவடிக்கைகள்.

நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தில் கடந்த 4 ஆண்டுகளாக பணியாற்றும் ஒப்பந்த தொழிலாளர்கள், தினக்கூலி தொழிலாளர்களின் விவரம், அவர்களுக்கு வழங்கப்பட்ட ஊதிய விவரம்.

நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தில் பணியாற்றும் ஊழியர்கள், அவர்களுக்கு கடந்த 4 ஆண்டுகளில் வழங்கப்பட்ட ஊதிய விவரம்.

இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினார்.

நிலக்கரி மற்றும் சுரங்கத்துறை அமைச்சர் ஜி.கிஷன் ரெட்டி அளித்த பதில்:

நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தில் பணியாற்றும் ஒப்பந்த தொழிலாளர்களுக்கு பல்வேறு நலத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. கடந்த 2021 மார்ச் வரை 11,379 நிரந்தர தொழிலாளர்களுக்கு 2,688.36 கோடி ரூபாய், 2022 மார்ச் வரை 11246 நிரந்தர தொழிலாளர்களுக்கு 2,624.48 கோடி ரூபாய், 2023 மார்ச் வரை 10781 நிரந்தர தொழிலாளர்களுக்கு 2,526.32 கோடி ரூபாய், 2024 மார்ச் வரை 10368 நிரந்தர தொழிலாளர்களுக்கு 2,646.73 கோடி ரூபாய் ஊதியமாக வழங்கப்பட்டுள்ளது.

இதுபோல, சுரங்கத்தின் மேல் பகுதியில் பணிபுரியும் திறனில்லா தொழிலாளர்களுக்கு 25067 ரூபாய், பகுதி திறன் உடைய தொழிலாளர்களுக்கு 26679 ரூபாய், திறன் உடைய தொழிலாளர்களுக்கு 28161 ரூபாய், திறன்மிகு தொழிலாளர்களுக்கு 30522 ரூபாய் மாதந்தோறும் வழங்கப்படுகிறது.

சுரங்கத்தில் பணிபுரியும் திறனில்லா தொழிலாளர்களுக்கு 26289 ரூபாய், பகுதி திறன் உடைய தொழிலாளர்களுக்கு 27901 ரூபாய், திறன் உடைய தொழிலாளர்களுக்கு 30652 ரூபாய், திறன்மிகு தொழிலாளர்களுக்கு 33460 ரூபாய் மாதந்தோறும் வழங்கப்படுகிறது.

சுரங்கமல்லாத பகுதியில் பணிபுரியும் திறனில்லா தொழிலாளர்களுக்கு 24937 ரூபாய், பகுதி திறன் உடைய தொழிலாளர்களுக்கு 26185 ரூபாய், திறன் உடைய தொழிலாளர்களுக்கு 27641 ரூபாய், திறன்மிகு தொழிலாளர்களுக்கு 29248 ரூபாய் மாதந்தோறும் வழங்கப்படுகிறது.

நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தில் 2021ம் ஆண்டு ஏப்ரல் வரை 14992, 2022ஆம் ஆண்டு ஏப்ரல் வரை 15012, 2023ம் ஆண்டு ஏப்ரல் வரை 15736, 2024 ம் ஆண்டு ஏப்ரல் வரை 16142 ஒப்பந்த தொழிலாளர்கள் பணிபுரிந்தனர்.

இவ்வாறு அமைச்சர் பதிலளித்தார்.




புதுதில்லி டாக்டர். அம்பேத்கர் சர்வதேச மைய வளாகத்தில் நேற்று முன்தினம் (15.12.2024) ஒன்றிய சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சர் முனைவர். வீரேந்திரகுமார் அவர்களின் தலைமையில், மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம் 2016ன் கீழ் அமைக்கப்பட்ட மத்திய ஆலோசனை வாரியத்தின் 7வது கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சார்பாக, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் மருத்துவர். மா.மதிவேந்தன் கலந்து கொண்டு, மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காக தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வரும் முன்னோடி திட்டங்களின் நிலையினை எடுத்துரைத்து, கோரிக்கைகளை பரிசீலித்து அதற்கான நிதியினை விரைவாக விடுவிக்க ஒன்றிய அமைச்சரிடம் கடிதம் வழங்கினார். இந்நிகழ்வில் மாற்றுத்திறனாளிகள் நலத் துறை இயக்குநர்/ மாற்றுத்திறனாளிகள் நலத் துறை அரசு கூடுதல் செயலாளர் திருமதி எம்.லஷ்மி உடனிருந்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கங்கைகொண்டான் ஆ.கருப்பையா
### டிசம்பர் 17 (2013)



**பேரறிஞர் அண்ணா அவர்களால் 1967–ல் நடைபெற்ற விருகம்பாக்கம் கழக மாநாட்டில் ‘கங்கைகொண்டான்’ தொகுதியின் வேட்பாளராக அறிவிக்கப்பட்டு வெற்றி பெற்றதோடு, அடுத்து நடைபெற்ற 1971 சட்டமன்றத் தேர்தலிலும் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.**

**1953–ஆம் ஆண்டில் கங்கைகொண்டானில் கிளைக் கழகத்தை உருவாக்கி, அதன் செயலாளராகப் பொறுப்பேற்றவர்.**

**கூட்டுறவு சங்கத் தலைவர், பஞ்சாயத்து வார்டு உறுப்பினர் பொறுப்பேற்று விவசாயப் பெருங்குடி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**கங்கைகொண்டான் பஞ்சாயத்துத் தலைவராக இருந்தபோது, சாதிசமய வேறுபாடற்று பஞ்சாயத்தில் தொண்டாற்றியதற்காக குடியரசுத் தலைவரிடம் விருது பெற்றவர்.**

**இந்தி எதிர்ப்புப் போராட்டம் உள்ளிட்ட அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**